# முன்னுரை

பல்வேறு வடிவிலான பிரச்சினைகளை எதிர்நோக்கிய சர்வதேச சமூகம் அதற்கான மனிதாபிமான உதவிகள், அபிவிருத்தி உதவிகள், மற்றும் நெருக்கடிகளை தவிர்ப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக தனது பிரதிபலிப்புகளைக் வெளிக் காட்ட முயற்சித்துள்ளது. இத்தகைய பலதரப்பட்ட நடவடிக்கைகள் ஊடாக நிலைபேறான அபிவிருத்தி மற்றும் சமாதானத்திற்கான வாய்ப்புக்களை அதிகரிக்கும் அதேவேளை நெருக்கடி தொடர்பான பலதரப்பட்ட தீர்மானங்களை எடுப்பதற்கும் முயற்சித்துள்ளது. உண்மையாக என்ன நடைபெறுகின்றது என்பதை புரிந்து கொள்வதற்காக தனது அனுபவம் மற்றும் மிகவும் சிறந்த நடவடிக்கைகள் என்ன என்பதை தேர்ந்தெடுக்கும் பொருட்டு, அதற்கான தகவல்கள் தனிப்பட்ட செய்திட்டங்கள், மற்றும் நிகழ்ச்சித்திட்ட மதிப்பீடுகள் மூலம் சேகரிக்கப்படுகின்றது. இது தொடர்பாக இதுவரை மேற் கொள்ளப்பட்ட கற்றல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள போதிலும் விடயத்துறை அல்லது அதனைப் பாவிப்பவர்கள் தொடர்பில் மிகவும் விரிவான கலந்துரையாடல்களை ஏற்படுத்தும் பொருட்டு **முறையாக அல்லது ஒன்றுதிரட்டி தயாரிக்கப்பட்டுள்ள பாடங்களே இவை ஆகும்**.

வன்முறை நெருக்கடி மற்றும் அவை சம்பந்தமாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நபர்களினால் எதிர்கொள்ளப்பட்ட பல சவால்களுக்கு தீர்வாக ஆக்கபூர்வ மோதுகை முகாமைத்துவத்துக்கான பேர்கோஃவ் ஆய்வு நிலையம் இந்த வழிகாட்டியை தயாரித்துள்ளது. பல தரப்பட்ட கோணங்களினால் மோதுகை மாற்றுநிலையாக்கத்துறையில் தற்போது ஏற்பட்டுள்ள வளர்ச்சி தொடர்பாக தெரிவாக்கலொன்றை வழங்குவது இதன் நோக்கமாகும். நிபுணத்துவம் வாய்ந்த பகுப்பாய்வுகள் மற்றும் அவற்றைப் பயன்படுத்துபவர்கள் உட்பட நெருக்கடி பிராந்தியங்களில் அல்லது அதற்கு வெளியிலிருந்து பலதரப்பட்ட துறைகளை பிரதிபலிக்கும் வகையில் நற்புணர்வுகளினால் வழங்கப்பட்ட கருத்துக்களும் இதில் அடங்குகின்றன.

இந்த கைந்நூல் பல கட்டங்களாக தயாரிக்கப்பட்டுள்ளது. முதலாவது பேர்கோஃவ் நிறுவனத்திலுள்ள இணையத் தளத்தில் (www. berghof-handbook.net) முதலாவது ஆவணமாக இது வெளியிடப்படுகின்றது. இலக்காகக் கொள்ளப்பட்ட ஆவணங்களில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக விவாதமொன்றை ஆரம்பிக்கும் நோக்குடன் அவற்றை பாவிப்பவர்களிடமிருந்து கிடைக்கும் பிரதிபலிப்புக்களுக்கான ஓர் மேடையாக இது அமைகின்றது. இதற்கான மேலதிக ஆவணங்கள் மற்றும் இவ்வாறான உள்ளீடுகள் மோதல்களை தவிர்க்கும் துறையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியைக் காட்டும் சந்தர்ப்பத்தில் வழிகாட்டிகளையும் வேறு வெளியீடுகளையும் வெளியிடுவதற்கு வாய்ப்பாக இருந்தது. இரண்டாவதாக பெரும்பாலான கற்றறிவாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் இவ்வாறான ஆவணங்களின் தொகுப்பொன்றை அடிக்கடி கோரி நிற்பதால், அதற்கான ஆரம்பமாக இந்த வெளியீட்டை வெளியிட தீர்மானிக்கப்பட்டது.

எமது முயற்சிக்காக இக் கைந்நூல்களுக்கு கட்டுரைகளை சமர்ப்பிக்குமாறு எமது அழைப்பை ஏற்ற அங்கத்தவர்கள் மற்றும் இத்தகைய வழிகாட்டி நூலொன்றை கோரி நின்ற புத்திஜீவிகளுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மிகவும் அனுபவமும், திறமையும் மிக்க செயற்பாட்டாளர்கள் மற்றும் அனுபவசாலிகளான அவர்களின் சிலர் நெருக்கடி தவிர்த்தல் தொடர்பான துறைகளில் முன்னோடிகளாகவும் விளங்குவதுடன் இந்த கைந்நூலில் ஒரு பொதுத்தன்மையை ஏற்படுத்துவதற்காக அவர்கள் தமது எழுத்து நடையை மாற்றிக் கொள்ளும் பொறுப்பினையும் ஏற்றுக் கொண்டார்கள். இந்த வழிகாட்டிக்காக இடைத்தர மற்றும் அச்சக வெளியீடுகளுக்கு தமது பங்களிப்பை வழங்கிய அனைத்து எழுத்தாசிரியர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது வாசகர்கள் மற்றும் மேற்கூறிய நபர்களுடன் எமது துறையில் கோட்பாடுகள் மற்றும் பயன்பாடு என்பன தொடர்பாக கருத்து பரிமாறல்களை ஏற்படுத்திக் கொள்வதற்காக வாய்ப்புக் கிடைக்க வேண்டுமென்று பிராத்திக்கின்றோம்.

2003 ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை இணையத் தளத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த ஆவணங்களை திரட்டியதன் மூலம் கிடைத்த தகவல்கள், இந்த வெளியீட்டின் மூலம் வெளிக்கொணரப்படுகிறது. இந்த வெளியீடு இந்த செய்திட்டத்தின் இறுதி முடிவு அல்ல என்பதுடன், பேர்கோஃவ் வழிகாட்டி நூல் செய்திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல பேர்கோஃவ் குழு முயற்சி எடுத்து வருவதனால் இதனை ஓர் இடைக்கால அறிக்கையாக ஏற்றல் வேண்டும். எதிர்வரும் அபிவிருத்திப் பணிகளின் போது பின்வரும் விடயங்களும் அதில் உள்ளடக்கப்படும்.

1 கடந்த காலத்தில் இலக்காகக் கொள்ளப்பட்ட தொனிப் பொருட்கள் மற்றும் பிரச்சினைகளை யதார்த்தமாகக் கொள்ளல்

2 விசேட அக்கறை மற்றும் முக்கியத்துவம் வாய்ந்ததென கருதப்படும் துறைகளில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக விவாதங்களையும், கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளல்.

3 இணையத் தளத்தை மீள் ஒழுங்கமைப்பின் ஓர் கட்டமாக சேவை வழங்கல் மற்றும் மீள் போசாக்காய்வு ஊடகமாக பயன்படுத்தல்

இனகுழும ரீதியிலான அரசியல் நெருக்கடி தொடர்பான துறைகளில் சமாதான பயன்பாடு மற்றும் பகுப்பாய்வுகள் தொடர்பாக அக்கறைக் காட்டும் நண்பர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு எமது இணையத் தளத்தில் what’s new என்பதன் கீழ் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களை பரிசீலிப்பதற்கு வாய்ப்பு வழங்குவதும் இதன் நோக்கமாகும்.

எதிர்காலத்தில் வாத விவாதங்களை நடத்துதல், பேச்சுவார்த்தைகளை நடத்துதல் போன்றன இதற்கான எதிர்வரும் திட்டங்களின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்த வெளியீட்டின் முதற் பிரிவுடன் ஆரம்பமான சமாதானம் மற்றும் **நெருக்கடிகளாவன** அழுத்தங்களின் மதிப்பீடு என்ற தலைப்பில் நடைபெற்ற விவாதத்தை ஒத்திருக்கின்றன. இந்த விவாதம் ஏற்கனவே ஓர் அச்சக வெளியீடாக பேர்கோஃவ் நிலையத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. (அலெக்ஸ், மார்ட்டினை சயர் ஒலிவர் டிலிக்ஸின் சமாதான மற்றும் நெருக்கடி அழுத்தங்கள் தொடர்பான மதிப்பீடு கோட்பாடுகள் மற்றும் பாவனை தொடர்பான தர்க்க ரீதியிலான கருத்துக்கள் மற்றும் பேர்கோஃவ் பேச்சுவார்த்தை வழிகாட்டி நூல், அபிவிருத்தியிலான நெருக்கடி முகாமைத்துவம் என்பவற்றுக்கான விடயங்கள் இதில் அடங்குகின்றன. (பேர்கோஃவ் ஆய்வு நிலையம் பேலின் 2003 ஜப் பார்க்க) எனவே இந்த தொகுப்பில் மாக் லெப்மானின் முதலாவது பங்களிப்பு மாத்திரமே உள்ளடக்கப்பட்டுள்ளது.



இந்த பேர்கோஃவ் நூலை வெளியிடும் போது பலதரப்பட்ட வகையில் உதவிய ஸ்தாபனங்கள், அமைப்புக்கள், நிதி உதவிகளை வழங்கிய நண்பர்கள் என்பவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். விசேடமாக மோதுகை ஆய்வுத் தீர்வுக்கான பேர்கோஃவ் அமைப்பு மற்றும் ஜேர்மன் சமஸ்ட்டி அரசின் கற்கைகள் மற்றும் ஆய்வு அமைச்சு இதற்குள் அடங்கும்.

பேர்கோஃவ் வழிகாட்டி நூலை தயாரிப்பதற்கான அணி உருவாகிய நாள் தொடக்கம் இந்த திட்டத்துக்கு பலதரப்பட்ட சந்தர்ப்பங்களில் பல தடவைகள் உதவிய அனைவருக்கும் நாம் நன்றி உடையவர்களாகின்றோம். எமது பதிப்பாசிரியர் அலெக்சண்டர், காலோஸ் வைல்ட், ரேனர் ஸ்டெபின்லென், ஒலிவர் வில்ஸ், கலெம் மெக் கார்டினி, ஹிலரி கொச் கொன்ஸ் டாம்டே ஹெலம்பேன் எரிக்மென்டென் அஸ்ரிட் சிபர் மற்றும் உல்ரபிக் ஆகியோரை இங்கு பிரதானமாக குறிப்பிடலாம்.

பர்வினின் மோதுகை முகாமைத்துவம் தொடர்பான பிர்கொல் ஆங்சு நிலையத்தினால் எழுதப்பட்ட (Transforming Ethno political Conflict) என்ற வழிகாட்டி, 21 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உள்நாட்டு மோதல்கள் தொடர்பில் பதில் அளிக்கும் வகையில் அறிவு ரீதியினாதும் தொழில் ரீதியிலானதுமான கலந்துரையாடல்கள் தொடர்பில், தேர்ச்சிப் பெற்ற சுருக்கமொன்றை வழங்குவதற்காக இந்த வழிகாட்டியில் உள்ள ஆவணங்களை தமிழ் மொழியிலும் வழங்க முடிந்தமையையிட்டு நாம் பெரிதும்

மகிழ்ச்சியடைகின்றோம். எமது உதவியாளர்களான ஜேர்மனியின் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான சமஸ்டி அமைச்சு (BMZ) ஜேர்மன் தொழில்நுட்ப ஒத்துழைப்பு முகவர் நிலையம் (GTZ) சுவிர்சலாந்தின் வெளிநாட்டு சமஸ்ட்டி திணைக்களம் (EDA) என்பவற்றுக்கு எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பேர்கோஃவ் வழிகாட்டி படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது. அது www.berghof-handbook.net ஊடாக தொடர்ச்சியாக வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பாகும். இந்த இணையத்தளத்தை பயன்படுத்துபவர்களிடமிருந்து பதில் கருத்துக்கள் மற்றும் கட்டுரைகளின் உள்ளடக்கம் தொடர்பான விவாதங்கள் என்பவற்றை ஊக்குவிப்போர் மேடையாகவும் இது ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இந்த மீள் உரமூட்டல், மேலதிக ஆவணங்கள், உள்ளீடுகள் மூலம் மோதல் தவிர்ப்புத் துறையில் புதிய வளர்ச்சியைக் காட்டும் மேலதிக ஆவணங்கள் ஆகிய சட்டவளர்ச்சி ரீதியிலான கைந்நூலொன்று இவ்வாறு வெளியிடப் படுகின்றது. இரண்டாவதாக பெரும்பாலான புத்திஜீவிகள், மற்றும் தொழில் நிபுணர்கள் உள்ளடங்கலாக அவர்களுடன் பங்களிப்புடன் மிகவும் இலகுவான நூல்களுக்கான தேவைப்பாடுகள் இருப்பது எம்மால் உணரப்பட்டதனால் இதன் மூலப் பிரதியொன்றை வெளியிட தீர்மானித்தோம். (மூலம் 2004 இல் வெளியிடப்பட்டது) இந்த சிங்கள மொழிபெயர்ப்புக்கு அமைவாக நாம் தமிழ்மொழி மூலமும் (கொழும்பு விஜிதா யாப்பா பதிப்பகத்தினரால் வெளியிடப்பட்டுள்ளது) மற்றும் ரஷ்ய மொழியிலும் (மொல்கலின் நோகா - வினால் வெளியிடப்பட உள்ளன) இந்த வழிகாட்டியை வெளியிட உள்ளோம்.

மூன்றாவது விடயம் நாம் பேர்கோஃவ் வழிகாட்டி விவாதத்துக்கான வெளியீடொன்றையும் இணைத்துள்ளோம். ஒவ்வொரு கருத்து பரிமாற்ற விவாதங்களுக்குள் மோதல் தவிர்ப்புத் தொடர்பான முக்கிய கட்டுரைகளும், புத்திஜீவிகள், தொழில்சார் நிபுணர்கள் ஆகியோரின் 5 அல்லது 6 வரையிலான பகுப்பாய்வுக் கட்டுரைகளும் இதில் அடங்குகின்றன. எங்களால் சமாதானம் மற்றும் மோதல் தவிர்ப்பு மதிப்பீடு தொடர்பான புதிய வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு, மீள ஒழுங்கமைப்புக்கான (SSR) யுத்த காரணிகள் தவிர்ப்பு மற்றும் சமூக மோதல் தவிர்ப்பு தொடர்பான கருத்து பரிமாறல்கள் அடங்கிய தொகுப்பு நூலும் முன்னர் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழாக்கற் செவ்வையாக்கத்தினை மேற்கொண்ட பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கட்கும், ஒப்புநோக்குப் பணியினை ஆற்றிய அருட்தந்தை ஏ.ஜ.பேர்னாட் அடிகளார்க்கும், தமிழாக்கற் செவ்வையாக்கத்திற்கு உதவியாளரான ச.பா.நிர்மானுசன் அவர்கட்கும், ஆரம்ப முயற்சிகளுக்கு தமது பங்களிப்பினை நல்கிய சின்னத்துரை துரைராஜ, ரோபேர்ட் வேதநாயகம், எட்வட் பீரிஸ், மொகமட் பிஃக்ரி, ஜெ.மகாதேவா, எஸ்.விஸ்வலிங்கம் ஆகியோருக்கும் மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவில் பணியாற்றிய சுரேன் ராகவன், டில்ஷான் முகாஜரின், மனிக் மென்டிஸ், கிரோஷி குணதிலக்க, டஃப்னி ஜெபமனி, ஸ்வேதா வேல்பிள்ளை ஆகியோருக்கும் எமது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நோபேர்ட் ரோப்பர்ஸ்
ஆசிரியர் பீடத்தின் சார்பாக
டேவிட் புலும்பீல்ட், மார்ட்டினா ப்பிஷர்
மற்றும் பியட்ரிஸ் ஸ்மெய்சல், பேலின்